விலை ரூபா 1:25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28    ஐப்பசி 14    ஸபர் 26    இதழ் 263

யாழ்ப்பாணம்    வெள்ளிக்கிழமை    31-10-1986

## அரசின் திட்டத்தை முறியடிக்க நாம் மேற்கொண்ட நடவடிக்கைகள்

### — ஈரோஸ்

(நமது நிருபர்)

'திருமலை நகரை ஸ்ரீ லங்கா அரசு பூரணமாக தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து அந்நிய முதலீடுகளுக்கு இடமளிப்பதனூடாக எமது பிரதேசங்களை ஏகாதிபத்தியத் திடம் தாரைவார்க்க முனைந்து நிற்கிறது. இதனை முறியடிக்கும் நோக்கில் எம்மால் ஜப்பானிய 'மிற்சுபி' சீமெந்து தொழிலகம் செயலிழக்கப்பட்டிருந்ததையும், திருமலை பாவட்டத்திற்கான மின்னிணைப்புகளும், மின்மாற்றிக் கோபுரங்களும் எம்மால் தகர்க்கப்பட்டதும் இங்கு நினைவு படுத்தவிரும்புகிறோம். தற்போது மேற்கொள்ளப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கையினூடு திருமலை நகரில் செயற்படடுவரும் அனைத்து அந்நிய தொழிலகங்களும், அரசு நிறுவனங்களும், வெளித்தொடர்பு எதுவுமின்றி ஸ்தம்பித்துள்ளன'

'ஈழப்புரட்சி அமைப்பு' [ஈரோஸ்] பொது ஆணைக்குழு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது!

திருமலை தொலைத் தொடர்புபரிவர்த்தனைமையம் கடந்த செவ்வாய்க்கிழமை எம்மால் முற்றாகத் தகர்க்கப்

(8ம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு யாழ். மத்திய கல்லூரி மாணவ தலைவன் பலி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்திலிருந்து நேற்றுக் காலை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப்பிரயோகத்துக்கு யாழ். மத்திய கல்லூரி மாணவ தலைவர் ஒருவர் பலியானார்.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த பொன்னம்பலம் விபுலானந்தன் (வயது 17) என்ற க. பொ. த. உயர்தரம் விஞ்ஞான பிரிவு மாணவனே துப்பாக்கிச்சூட்டுக்கு பலியானவராவர்.

இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது: நேற்றுக்காலை யாழ் மத்தியகல்லூரி அருகில் 'சென்றிக்கு' நின்ற புளொட் போராளிகள் சென்றிலைய வாடஸ்பெற்றுச் சென்றசமயம் அவர்களினால் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியை செயலிழக்கச்செய்ததைத் தொடர்ந்து, யாழ். பொலிஸ் நிலையத்திலிருந்து இராணுவத்தினரால் தொடர்ச்சியாக துப்பாக்கிடபிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.



அந்நேரம் யாழ் மத்திய கல்லூரியின் மேல் மாடியிலுள்ள தனது வகுப்பறையில் ஏற்பட்ட பதற்ற நிலையில் மாணவர்களைப் பாதுகாப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்த சமயம் இவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார். இடது பக்க முதுகில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் அவர் துடிதுடித்து விழுந்தார்; உடன யாழ். ஆஸ்

[5ம் பக்கம் பார்க்க)

### இன்று இறுதி அஞ்சலி

யாழ்ப்பாணம், வெள்ளி.

இராணுவ துப்பாக்கிச் சூட்டுக்கு நேற்றுப் பலியான யாழ் மத்திய கல்லூரி மாணவன் பொ. விபுலாந்தனின் பூதவுடல் இன்று பி பகல் 3 மணி வரை மாணவர்களதும் பொது மக்களதும் இறுதி அஞ்சலிக்காக அன்னுரது கஸ்

(5ம் பக்கம் பார்க்க)

● கொக்காவிலுக்கு அண்மையில்

# புலிகளின் கண்ணிவெடிக்கு பத்து இராணுவத்தினர் பலி!

## வாகனம் முற்றுகச் சேதம்

(நமது நிருபர்)

கொக்காவிலுக்கு அண்மையில் இராணுவத்தொடர் வண்டிகள் மீது தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கண்ணி வெடித்தாக்குதலில் ஒரு ட்ரக் முற்றுகச் சேதமடைந்ததுடன் அதிலிருந்த 10க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

நேற்றுக்காலை இக்கண்ணி இடம்பெற்றதாக விடுதலைப் வெடித்தாக்குதல் சம்பவம் புலிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

மாங்குளத்திலிருந்து நேற்றுக்காலை 11-25 மணியளவில் 50க்கு மேற்பட்ட இராணுவத் தொடர்வண்டிகள் ்கிதம் இராணுவத்தினர் ரோந்து சென்றனர்

கொக்காவிலுக்கு அடுத்துள்ள பழைய முறிகண்டி என்னுமிடத்தை இராணுவ வண்

(8ம் பக்கம் பார்க்க)

ஈழத்தமிழரின் இன்னல் தீர்த்திட

ஆக்கப்பணிபுரிந்த

அன்னை இந்திராவுக்கு

அஞ்சலிகள்

இந்திரா ஜுவல்லர்ஸ்

185A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அசல் 22கரட் தங்கநகைகள்
ஓடருக்கு செய்துகொடுக்கப்படும்.

றெடிமேட் நகைகளுக்கும்
உத்தரவாதமுண்டு.

நவ நாகரீக நகைகளின் இன்றையதேவையே
எமது சேவை. (ட-5521)

## தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் தடைசெய்யப்பட்டதேன்?

### ஈ பி. ஆர். எல். எவ்.

யாழ்ப்பாணம், வெள்ளி

ஈழ மக்களுக்கான தமது பணியை தம்மால் இயன்ற வரை ஆற்றி வந்துள்ள தமிழீழ மக்கள் விடுதலைக் கழகப் போராளிகளுக்கு தடைவிதிக்கப்பட்டதேன? இரத்தக்களரியை எதிர் நோக்க நேரிடும் வகையில் அவர்களுக்கு கிடைத்திருக்கும் அச்சுறுத்தலின் பின்னணி என்ன? என்று ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி நேற்று வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினுள் தலைவிரித்தாடிய அராஜகத்திற் கெதிராக போராடி இறுதிவரைக்கும் மக்களுக்கான பணியை புளொட் போராளிகள் செய்து வந்துள்ளனர். யாழ். நகருக்கு போரிடும் தசத்தின் சின்னங்களாக புளொட் போராளிகளால் பொறிக்கப்பட்ட

(8ம் பக்கம் பார்க்க)

## எம். ஜி. ஆர். முயற்சி பயனளிக்காவிட்டால் ராஜீவ் போராளிகளுடன் நேரடியாகப் பேசுவார்

(நமது நிருபர்)

இலங்கை இனப் பிரச்னை தொடர்பாக மூன்றும் கட்டப் பேச்சுவார்த்தையில், தமிழ்ப் போராளிகள் குழுக்கள் பங்கு பற்றும் முயற்சியில் வெற்றி பெற தமிழ் நாடு முதலமைச்சர் எம். ஜி இராமச்சந்திரன் தவறும் பட்சத்தில், பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்துவாரெனஇராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன

மாகாண சபைகள் அமைப்பது, அவைகளுக்கு வழங்கப்படும் அதிகாரப் பரவலாக்கத்தின் அளவுகள் பற்றி இலங்கை அரசாங்கம் முன் வைத்துள்ள யோசனைகளில் சில விடயங்கள் தொடர்பாக பிரதமர் ராஜீவ் காந்தி, ஜனாதிபதி ஜயவர்த்தனவுடன் பெங்களூரில நடைபெறவுள்ள 'சார்க்' மகாநாட்டில் சந்திக்குப்போது பேச்சுவார்த்தை நடத்துவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழர் கூட்டணிக்கும் அரசுக்குமிடையிலான மூன்றும்

[8ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### பயிற்சி

Radio, T V. Repairing செய்முறையுடன் பயிற்சியளிக்கப்படுகின்றன. காலம் 4 மாதம். Sat., Sun. பி. ப. 5-00—7-30. ஆரம்பம்: 1-11-86. அனுமதிகள் 15-11-86 வரை வழங்கப்படும். விபரங்கட்கு: Varuba Electrical, சிரணிச் சந்தி, சண்டிலிப்பாய். (C-5461)

## வகுப்புகள்

கேக் ஐசிங் வகுப்புக்கள் [3 Months Course] திங்கட்கிழமையும் புதன் கிழமையிலும் 4 மணிக்கு நடைபெறுகின்றன. இடம்:- 10/5 சிவன் வீதி, திருநெல்வேலி (சென்றல் நேர்சிங்ஹோமிற்கு அருகிலுள்ள ஒழுங்கையில்.) [C5500]

## சேவை

தரமான போட்டோஸ்ரற் பிரதிகள், தெளிவான 'ரூேனியோ' பிரதிகள் தமிழ்-ஆங்கில 'ரைப்பிங்' வேலைகளுக்கு; கிளீன்கட், 239, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22823. C 5422

கைரேகை, எண்சோதிடம் கிரகநிலை விபரமாகப்பார்த்து உண்மைநிலை சொல்லப்படும். இத்துடன் மணமகன், மணமகள் தேவையானவர்களும் உடன்தொடர்புகொள்ளலாம் செவ்வாய் குற்றமுள்ள சாதகர்களுக்கு முதலிடம் உண்டு. செ நாகேந்திரராசா, 174/16, கோவில்வீதி. (கைலாசபிள்ளையார் கோவிலடி) யாழ்நகர். (C-5499)

### ஓராண்டு நினைவஞ்சலி



கந்தப்பு வீரசிங்கம்
பிறப்பு: 3-4-1959
இறப்பு: 10-11-1985

ஒட்டுசுட்டான் மாங்குளம் ரோட்டில் என்றும் போல் அன்றும் அண்ணன் தம்பியாய் அருகருகில் வந்தோம். பழிகாரப்பாவிகள் உம்மையும், எமது கடைகள், வாகனம் தொழிற்சாலை யாவற்றையும் அழித்தார்கள். ஆனால் உன் நினைவு நான் உள்ள வரை என் நெஞ்சை விட்டகலாது தம்பி. என்றும் உன் அன்பான நினைவுகளைச் சுமந்து நிற்கிறேன் பட்ட மரமாய்.

அண்ணர்: சிவா.
12-ம் வட்டாரம்,
புங்குடுதீவு. (C 5494)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## விற்பனைக்கு

Honda Chaly விற்பனைக்குண்டு விபரங்கட்கு 'விஜித்தா' கபே, மெயின் வீதி, யாழ்ப்பாணம். (பிலிப் நேர்சிங் கோமிற்கு முன்பாக.) C 5501

Candy பெரிய குளிர்சாதனப்பெட்டி, கடைப்பாவனைக்குரிய தேநீர் தயாரிக்கும் Stainless Steel English Boiler, Kenwood Chef மற்றும் பல. உடன் விற்பனைக்கு. 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். C 5404

ரோசாச் செடிகளுக்கேற்ற விஷேச "ரோசா உரம்" விற்பனைக்குண்டு. M G M, and Stores, 781, K.K S Road and 208, Ist Cross St, Jaffna T. P. 22611. [C 5072]

கொழும்புத்துறை சுவாமியார் விதியில் மூன்று பரப்புக் காணி விற்பனைக்குண்டு தொடர்புகொள்ளவும்: விளம்பர இல. A 3015 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். A 3015

Broiler இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டியது; சீமாட்டி Fancy goods, 158 நவீன சந்தை, யாழ்ப்பாணம், தொலைபேசி: 24413, 24096. சீமாட்டி பாம், ஸ்ரேசன் ரோட், மயிலன் காடு, சுன்னாகம். (C 5463)

மைசூர் அரிசி நம்பர் 1. கல்லில்லாதது. சுத்தமானது தரமானது, சுவையானதும் கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது உங்கள் சகல தேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும். மைசூர் அரிசியையே கேட்டுவாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். மைசூர் அரிசி ஆலை, புனித அன்னம்மாள் கோவில்வீதி, மானிப்பாய். [C-5042]

பலவிதமான பாவித்த வீட்டுத்தளபாடங்கள், முதிரை, பலா, தேக்கு அலுமாரிகள், கட்டில்கள், குளிர்சாதனப்பெட்டி, கசற்றேடியோக்கள், Dinner Set, Pyrex Tea Set, கிளாஸ், சில்வர் வகைகள், Formica சாப்பாட்டு மேசைகள், Vacuum Cleaners, Floor Polisher எலற்றிக் அயன், Fan, Kenwood Chef, Electric Water Boiler, Show cases T V Stand கண்ணாடி மேசைகள் Meat safe மற்றும்பல உடன் விற்பனைக்கு M. தியாகராஜன், 326 பிரதான வீதி, யாழ்ப்பாணம், (C 5503)

## தேவை

சகல வசதிகளும் கூடிய அச்சகம் கமிஷன் அடிப்படையில் தேவை. தொடர்பு: விளம்பர எண் C 5459, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 5459]

அரசாங்க ஸ்தாபனத்தில் கடமையாற்றும் ஓர் இளம் குடும்பத்தினருக்கு மாநகர சபை எல்லைக்குள் அல்லது 1மைல் சுற்றளவிற்குள் நல்ல நிலையிலுள்ள வீடு ஒன்று விலைக்கு வாங்குவதற்குத் தேவை. முதற் கடிதத்திலேயே எல்லா விபரங்களையும் தெரிவிக்கவும். தொடர்பு கொள்க:- விளம்பர இல C-5505, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C-5505)

### உதைபந்தாட்டம்:

## இன்று முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி நாழ் உதைபந்தாட்ட லீக் விளையாட்டுக் கழகங்களிடையே 9 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்ட "நொக்கவுட்" போட்டியை இன்று முதல் நடாத்துகின்றது. இப்போட்டியில் மொத்தம் 11

(5ம் பக்கம் பார்க்க)

## மணப்பந்தல்

இந்து வேளாள சவுதியில் தொழில் புரியும் 33 வயதுடைய மணமகனுக்கு அதே குலத்தைச்சேர்ந்த 28 வயதிற்குட்பட்ட மணப்பெண் தேவை. உடன்தொடர்பு கொள்ளவும் சீதன விடயம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். விண்ணப்பிக்கவும்: விளம்பர இல C 5506 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். [C5506]

### இடமாற்றம்

பலாலி வாத வைத்தியர் வீ. டஞ்சாட்சரம் (ஐயர்) அவர்கள் பருத்தித்துறை வீதி, கொத்தாவத்தை, காங்கேசன்துறை என்னும் இடத்திற்குத் தனது வைத்திய நிலையத்தை இடமாற்றம் செய்துள்ளார். [C 3030]

## உற்பத்தி முகாமையாளர் பதவிக்கான பயிற்சி நெறிக்கு ஆட்சேர்ப்பு விண்ணப்பம்

தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களில் உருவாக்க இருக்கும் உற்பத்தி முகாமையாளர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் தகுதியுடையவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் வகையில் பின்வரும் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் பொதுமுகாமையாளர் வட மாகாண தெ ப. பொ. உ. வி கூ. சங்கங்களின் சமாசம், 330, கே கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 15-11-1986ம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும. பயிலுனர்கள் யாவருக்கும் வேலை வழங்கப்படும் என்ற உத்தரவாதம் இல்லை.

**தகைமைகள் :-**

க பொ. த. (உயர்தரம்) இரசாயன, பௌதிகம் உட்பட நான்கு பாடங்களில் சித்தியும்,
க பொ. த. (சாதாரணம்) கணிதம், மொழி, இரசாயனம், பௌதிகம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் கூடிய 6 பாடங்களில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை :-**

25—35 வருடங்கள்.

**சம்பளத்திட்டம் :-**

400 - 20X10, 30X4-720/-
(வாழ்க்கைப்படி தவிர)

**குறிப்பு :-**

தற்போது தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றும் உற்பத்தி முகாமையாளர்களுக்குமேற்கூறிய தகைமைகளில் இருந்து விலக்களிக்கப்படுகின்றது.

தலைவர்
பனை அபிவிருத்திச் சபை.
[A 3032]

குதூகல ஆரம்பம் 31-10-86
**யாழ். மின்சினிமா**
(ஸ்ரான்லி வீதி ரஜனி றிவைண்டர்ஸ் அருகாமை)
**31-10-86 வெள்ளிக்கிழமை**
**1.30 – 2.30 ஆரம்பம்**

## கந்தன் கருணை

(இலவச காட்சிகள்) காண்பிக்கப்படும். அன்பர்களும் ஆதரவாளர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

[C 5407] உரிமையாளர்.

### தீபாவளி நல்வாழ்த்துக்கள்

எமது வாடிக்கையாளர்களுக்கு அம்பாள் வீடியோ சென்ரர் ஸ்தாபனத்தார் தமது தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

## அம்பாள் வீடியோ சென்ரர்

894, கே கே. எஸ். வீதி,
நாச்சிமார்கோவிலடி,
யாழ்ப்பாணம். [C 5129]

## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ ஜேர்மனி
★ குவைத் ★ சவூதிஅரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் நேரடியாக அழைத்து செல்வார்.

குவைத்தில் கீழ்க்காணும் வருமானவாய்ப்புக்கள் உண்டு. Cleaners, house boys, Gardeners, House drivers, house Cook, Sales boys and Girls ஆகியவற்றிற்கு செல்லவிரும்புவோர் உடன் நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

சவூதி Labourers ஆக செல்லவிரும்புவோரும் தொடர்பு கொள்ளவும்.

டென்மார்க், ஜேர்மனி ஆகியவற்றிற்கு அடுத்த மாதம் 10ம் திகதி செல்லவுள்ளோம்.

குவைத்திற்கு செல்லவிரும்புவோர் 1-ம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்

விரைவாக அனுப்பிவைக்கப்படுவார்கள். உடன் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:-
**N. Bala**

பஸ் இல. 764, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு.
திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு.

★ உங்கள் நன்மை கருதி தீவுப்பகுதியில் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் என்னும் பெயரில் வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ளது
★ குப்பிளான் சந்திக்கு அருகாமையிலும் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

[A-2817]

## பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க், கனடா ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் நேரடியாக உடனுக்குடன் உங்களை அழைத்துச் செல்வார்.

### சவூதியில்:

1. AIRLINE ACCOUNTANTS
2. SALES PROMOTOR
3. TICKET and RESERVATION AGENT.
4. TRAFFIC OFFICER

(With ACCOMODATION and OTHER BENEFITS)

கிளீனர்ஸ், Drivers மேசன், காப்பெண்டர், Gardener, Labourer (இருப்பிடமும் சாப்பாட்டு வசதிகளுடனும்)

இவற்றுக்கான வருமான வாய்ப்புகள் உடனடியாக செய்து கொடுக்கப்படும்.

**குவைத்:** Labourer, கிளீனேர்ஸ், Drivers (இருப்பிடமும் சாப்பாட்டு வசதிகளுடனும்) இவற்றுக்கான வருமான வாய்ப்புகள் உடனடியாக செய்து கொடுக்கப்படும்.

எமது காரியாலயத்தில் பாஸ்போட் 10 படங்களுடன் உடனடியாக தொடர்பு கொள்ளவும் இவை கைவசம் உடன் இல்லாதவர்களும் தொடர்பு கொள்ளலாம். நன்றி

## GROUP ATLANTIC

(அடைக்கலமாதா கோவில் அருகாமையில்)
163, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (A 2838)

## போக்லண்ட் கடலில் பாதுகாப்பு வலயம்:

# ஆர்ஜன்டீனு, பிரிட்டன் உறவு மேலும் விரிசல்!

லண்டன், அக் - 30

தென் அத்திலாந்திக்கில் போக்லண்ட் தீவைச் சூழவா ஆயிரத்து ஐம்பது மைல்கள் தூரத்துக்கு பாதுகாப்பு வலயமொன்றை பிரிட்டன் அறிவித்துள்ளது. இதனையடுத்து ஆர்ஜன்டீனுவுக்கும் பிரிட்டனுக்குமிடையே இத்தீவு தொடர்பாக மீண்டும் பிணக்குகள் உருவாகும் அறிகுறிகள் தோன்றியுள்ளன. போக்லண்ட் பாதுகாப்பு வலய அறிவிப்பையடுத்து ஆர்ஜன்டீனு அதன் விமான கடற்படைப் பிரிவுகளை உஷார் நிலையில் வைத்துள்ளது.

ஆர்ஜன்டீன ஜனாதிபதி ராவுல் அல்போன்ஸின் பிரிட்டனின் மேற்படி அறிவிப்பையடுத்து தமது முப்படை உயரதிகாரிகளையும் நேற்று அவசரமாகக் கூட்டியிருந்தார். அத்துடன் ஐ நா ஸ்தாபனத்துக்கும் போக்லண்ட் மீது ஆர்ஜன்டீனு கொண்டுள்ள உரிமையை வலியுறுத்தி பிரிட்டனின் அறிவிப்புத் தொடர்பாக கண்டனம் வெளியிட்டார்.

1982 ம் ஆண்டு போக்லண்ட் தீவு மீதான ஆதிக்கம் தொடர்பாக பிரிட்டனும், ஆர்ஜன்டீனுவும் யுத்தத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

போக்லண்ட் தீவு சிறந்த மீன்வளத்தைக் கொண்டதாகும். இதன் காரணமாக மேற்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும். தூரகிழக்கிலிருந்தும் மீன்பிடிக் கலங்கள் இத்தீவுப் பகுதியை நோக்கிப் படையெடுத்துள்ளன.

இது தொடர்பாக போக்லண்ட் வாசிகள் பிரிட்டனுக்கு முறையிட்டதையடுத்தே இத்தீவைச் சூழவர ஆயிரத்து ஐம்பது மைகள் பாதுகாப்பு வலயம் போடப்பட்டுள்ளது.

ஆர்ஜன்டீனு தனது நாட்டின் இறைமைக்கு இதுசவாலாக இருப்பதாக அறிவித்துள்ளது.

இதேவேளை அடுத்தாண்டு பெப்ரவரி மாதம் தொடக்கமே மேற்படி பாதுகாப்பு வலயம் தீவிரமாக அமுலாக்கப்படும் என்று பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் திரு. ஜெவ்ரிஹொவ் தெரிவித்துள்ளார்.

## உளவு குற்றச்சாட்டு:

# இந்தியாவில் 6 பேருக்கு தலா 3 வருடச் சிறை!

புதுடில்லி, அக் 30

உளவுவேலையில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட ஆறு இந்தியர்களுக்கு தலா 3 வருட கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் 5 பேர் இந்திய அரச ஊழியர்களாவர்.

அமெரிக்காவுக்கு இந்தியாவின் பாதுகாப்பு, எண்ணெய்த்துறை. வெளிவிவகாரம் தொடர்பாக தகவல்களைக் கொடுத்ததாக இம்மூவர் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இவர்கள் மீதான விசாரணை 1977 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு கடந்த ஒன்பது வருடகாலமாக இந்தியாவில் விசேட நீதிமன்றமொன்றினுல் விசாரிக்கப்பட்டு வந்தது.

குற்றஞ் சாட்டப்பட்டவர்களில ஒருவரான பொறியியலாளரே இந்த உளவு வேலைகளின் சூத்திரதாரி எனத் தெரிவிக்கப்பட்டது. இவர் சுமார் 400 லட்சம் டாலர்களை இது தொடர்பாக அமெரிக்காவிடமிருந்து பெற்றிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

உலகச் செய்திகள்

## "வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு

# நோக்கர் குழு ஒன்றை அனுப்புக"

### செஞ்சிலுவைச் சங்கத்திடம் கூட்டணி கோரிக்கை

சென்னை அக் 30

இலங்கையில் வடக்கு கிழக்கு பகுதியில் தமிழ் மக்கள் படும் இன்னல்களை நேரில் அவதானிப்பதற்கு நோக்கர் குழுவொன்றை அனுப்புமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தை கேட்டுளளது.

யாழ்ப்பாணம் கோட்டை முகாமிலிருந்து இராணுவத்தினர் யாழ். பெரியாஸ்பத்திரி மீது தொடர்ந்து குண்டு வீசித் தாக்குதல் நடாத்துவதை கண்டித்து நேற்று சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

பொது மக்களின் பாதுகாப்பு கருதி கோட்டை முகாமிலிருந்து இராணுவத்தை அகற்றுமாறு இலங்கை அரசை செஞ்சிலுவைச்சங்கம் வற்புறுத்தவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

யாழ். பெரியாஸ்பத்திரி அண்மையில் நான்கு தடவைகள் தாக்கப்பட்டதில் பலத்த சேதமேற்பட்டுள்ளது போர்க்காலங்களில் கூட மருத்துவமனைகள் தாக்கப்படுவதில்லை ஆனல் யாழ்ப்பாணத்திலோ மனிதாபிமானமற்ற விதத்தில் தொடர்ந்தும் தாக்குதல் மேற்கொள்ளப்படுவதாகவும் அந்த கண்டன அறிக்கை தெரிவித்துள்ளது. (சி)

## "தமிழ்ப் போராளிகள் விடயத்தில்

# எம். ஜி. ஆர். பணி குறித்து டில்லி அதிகாரிகள் திருப்தி"

புதுடில்லி, அக் 30

"இலங்கை இனப் பிரச்னைக்குத் தீர்வு காணும் விடயத்தில் நடைமுறை ரீதியிலான கருத்தைக் கொள்ள வேண்டும் என தமிழ்ப் போராளிகளை வலியுறுத்தும் பணியில் தமிழக முதல்வர் எம் ஜி ராமச்சந்திரன் இப்போது முழுமையாக ஈடுபட்டுள்ளார் எனப் புதுடில்லி அதிகாரிகள் திருப்தி அடைந்துள்ளனர்"

இவ்வாறு சென்னை 'ஹிந்து' கருத்துத் தெரிவித்துள்ளது. 'ஹிந்து' மேலும் தெரிவித்துள்ளதாவது!

முதல்வருக்கும்போராளிகளுக்குமிடையிலான பேச்சுக்களில முதல்வருக்கு உதவு முகமாக முதல்வரின் வேண்டுகோளுக்கிணங்கவே மத்திய அரசியல் அமைப்பு நிபுணர் திரு என் பாலகிருஷ்ணன் சென்னை அனுப்பப்பட்டார். அவர் நவம்பர் மாதம் 3ம் திகதி நடைபெறவுள்ள எம் ஜி. ஆர். போராளிகள் சந்திப்பின பின்னர் புதுடில்லி திரும்பவுள்ளார்.

"இதே வேளை நவம்பர் 3ம் திகதியன்று போராளிகள் தமிழக முதல்வரைச் சந்திக்கையில் இலங்கையரசின் யோசனைக்கு மேலதிகவிளக்கங்களை கோரவுள்ளனர் என எதிர்பார்க்கப்படுகிறது. பின்னர் அவ்விளக்கங்கள் அவர்களுக்கு அளிக்கப்படும் ஆயினும் இந்நடவடிக்கையில் ராஜீவ், ஜே. ஆர் சந்திப்புநடத்துவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னரேயே நிறைவு பெற வேண்டுமென இந்திய மத்திய அரசு எதிர்பார்க்கிறது அப்போது தான் இச்சந்திப்பின் போது இந்திய தரப்பில் முன்வைக்க கூடிய கருத்துகளைத் தயாரிப்பது இந்திய அதிகாரிகளுக்கு இலகுவாக இருக்கும்"

[கூ - ஊ]

# சவுதி எண்ணெய் அமைச்சர் ஷேக் யமானி பதவி நீக்கம்!

லண்டன், அக் 30

சவுதி அரேபியாவின் எண்ணெய்த்துறை அமைச்சர் பதவியிலிருந்து ஷேக் யமானி நீக்கபபட்டுள்ளார்.

ஷேக் யமானி 20 வருடங்களுக்கும் மேலாக சவுதி அரேபியாவின் எண்ணெய்த்துறை அமைச்சராகக் கடமையாற்றினுர்.

சவுதி அரசாங்கம் ஷேக் யமானியை பதவி நீக்கியதற்கான காரணத்தை வெளியிடவில்லை இவரது பதவிக்கு உதவி திட்டமிடல் அமைச்சர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

உலக எண்ணெய் வர்த்தக வரலாற்றில் இவரதுபணி மிக மிக முக்கியம் வாய்ந்த தொன்றாகும் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஷேக்யமானி சவுதி எண்ணெய்த்துறை அமைச்சர் பதவியிலிருந்து விலக்கப்பட்டதையடுத்து 'ஒபெக்' ஸ்தாபனத்திலிருந்தும் நீக்கியுள்ளனர்.

'ஒபெக்' ஸ்தாபனத்தின் மிக முக்கிய புள்ளியாக ஷேக் யமானி விளங்கினுர். ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்கும், 1970 ம் ஆண்டுகளில் எண்ணெய் உற்பத்தி, ஏற்றுமதி ஆகியன சர்வதேசரீதியில் ஸ்திரமடைவதற்கும் ஷேக் யமானி முக்கிய காரணமாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒபெக் ஸ்தாபனத்தில் தோன்றியுள்ள சிக்கல்களும், சவுதி மற்றும் ஏனைய எண்ணெய் உற்பத்தி நாடுகளில் தற்போது நிலவும் ஸ்திரமற்ற எண்ணெய் வர்த்தக நிலைமையும் ஷேக் யமானியின் பதவி நீக்கத்துக்கு வழிகோலியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

## யாழ். தேர்தல் கந்தோரில்

# 86-ம் ஆண்டு வாக்காளர் இடாப்பு தயாரிக்கும் வேலை ஆரம்பம்

சுண்டுக்குளி, வியா.

யாழ் தேர்தல் அலுவலகத்தில் 1986ம் ஆண்டுக்குரிய வாக்காளர் இடாப்புக்கள் தயாரிப்பதற்கான வேலைகள் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ் அலுவலகத்தினுல்இந்த ஆண்டுக்குரிய வாக்காளர் இடாப்புக்கள் தயாரிப்பதற்காக கடந்தவருடம் தயாரிக்கப்பட்ட வாக்காளர் இடாப்பும், இடாப்பிலிருந்து அகற்றப்படும் பெயர்கள் அடங்கிய 'ஏ' நிரலும், புதிதாகச் சேர்க்கப்படவிருக்கும் 'பீ' நிரலும் தற்பொழுது பொதுமக்கள் பார்வைக்காக அந்தந்தப் பகுதி உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள், கிராம சேவையாளர் அலுவலகங்கள் மற்றும் தபாலகங்கள் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் இவற்றைப் பார்வையிட்டு இதில் தம்முடைய பெயர்கள் சேர்க்கப்படாதுவிட்டால் அவற்றைச் சேர்க்கவோ, அல்லது இறம்பெயர்ந்த ஒருவருடையபெயர் சேர்க்கப்பட்டிருந்தால் அவற்றை அகற்றவோ அல்லது திருத்தம் செய்யவோ விரும்புகிறவர்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் 3ந் திகதியிலிருந்து 30ந் திகதிவரை இதற்குரிய படிவங்களில் யாழ் தேர்தல் அலுவலகத்திற்கு விண்ணப்பிக்குமாறு யாழ் பிரதி தேர்தல்ஆணையாளர் திரு எஸ். தர்மபாலன் தெரிவித்துள்ளார்.

இதுசம்பந்தமான மேலதிக விபரங்களை அறிய விரும்புபவர்கள் யாழ் தேர்தல் அலுவலகத்துடன்தொடர்புகொள்ளுமாறும் கேட்கப்படுகின்றனர். (இ)

# சர்வதேச தமிழர் மாநாடு நடத்த 'ஹிந்துஸ்தான் முன்னணி' திட்டம்

சென்னை, அக் 30

இலங்கைத் தமிழர் பிரச்னையைச் சர்வதேசரீதியில் தெரியப்படுத்தி தமிழர்களுக்கு ஆதரவைத் தேடுமுகமாக சர்வதேச மாநாடு ஒன்றை 'ஹிந்துஸ்தான் முன்னணி' அடுத்த வருடம் ஜனவரி 23-ம், 24-ம் திகதிகளில் நடத்தத் தீர்மானித்துள்ளது.

இம்முன்னணியின் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி சென்னையில் செய்தியாளரிடையேபேசுகையில் இத்தகவலைத் தெரிவித்தார்.

இம்மாநாட்டில் பல நாடுகளில் இருந்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்வரென எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவித்த டாக்டர் சுவாமி, நியாயமானதொரு தீர்வைத்தமிழ்மக்கள் எதிர்க்கமாட்டாரென்பதை உலகுக்கு காட்டவேண்டுமெனவும் கூறினுர்.

இலங்கையரசு இறுதியாகச் சமர்ப்பித்துள்ள யோசனைகள் பற்றி கேட்கப்பட்டபோது, தமிழருடன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள சிங்களவர் தயாராயில்லை எனக் கூறினுர்.

[கூ-ஊ]

# 'சுகாதாரநிலையங்களின்பங்கு மிகவும் அவசியமானது'

உடுவில், வியா.

'போஷாக்குள்ள சத்துணவான திரிபோஷா பால்மா பலமாதங்களாக கர்ப்பிணிப் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எமது பிரதேசத்தில் வழங்கப்படவில்லை இதனுல் கர்ப்பிணிகளும் சிறுவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.'

இவ்வாறு கந்தரோடை ஆரம்ப சுகாதார நிலையத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவில் பேசிய கந்தரோடை உபதபாலதிபர் திரு. ஆ சி கணேசவேல் கூறினுர்.

இவ்விழாவுக்கு திரு க. கந்தையா தலைமைவகித்தார்.

தொடர்ந்து பேசிய அவர் "இன்று தமிழ்மக்கள் பலவழிகளிலும் இன்னல்பட்டு வருகிறார்கள். சிவில் நிர்வாகம் சீர்குலைந்திருக்கும் இன்றைய

(5ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

சிறிய விடயங்களில் பொறுமை காட்டாவிட்டால் பெரிய காரியங்கள் கேட்டுப்போகின்றன.

—அரிஸ்டாட்டில்

## நமதுநோக்கு

# உயிர்ப்பலிகளை நிறுத்த ஒருவழி வேண்டும்

இன்று கழிந்தால் நாளை தீபாவளி திருநாள்.

அரக்கரும், அரக்ககுணங்களும் உலகைவிட்டு பிரியாவிடை பெற்றுக்கொண்ட நாள் நீதியும் நியாயமும் நிலைபெற்று பூமியில் மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு வழிபிறந்த பெருநாள்.

அந்நாளை, என்னதான் கஷ்டங்கள், நெருக்கடிகள் இருந்தபோதிலும், தம்மால் முடியாது போனாலும் தம் குழந்தைகளாவது குதூகலமாகக் கொண்டாடி மகிழவேண்டும் என்று எண்ணுபவர்கள் யாழ். பிரதேசத் தமிழ் மக்கள்.

அதனால்தான் கடந்த சில தினங்களாக கடும் மழை பெய்தபோதிலும் யாழ. நகரில் அவ்வளவு சனத்தைக் காணமுடிந்தது.

நாம் ஒரு போராட்ட சூழ்நிலையில்வாழ்கின்றோம். ஈவிரக்கமற்ற ராணுவம் ஒன்று கோட்டை முகாமில் தங்கியிருக்கின்றது என்ற எண்ணம் ஒரு பக்கம் இருந்தாலும் மலிவு விலையில் கிடைக்கும் பொருள்களை திருவிழா சாட்டில் வாங்கிவைத்துக் கொள்வதில் ஒருவகை திருப்தி இவர்களுக்கு.

அனுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி ராணுவம் நூற்றுக்கணக்கான வாகனங்களில் நகர்ந்து கொண்டிருக்கின்றது ஆங்காங்கே தமிழ் இளைஞர்கள் சுற்றி வளைத்துப் பிடிக்கப்படுகிறார்கள். திடீர் திடீரென ஊரடங்குச் சட்டங்கள் தமிழ்ப்பகுதிகளில் அமுலுக்குவருகின்றன. கிழக்கிலே பல இடங்களில், சுற்றிவளைப்புகள், துப்பாக்கிச்சூடுகள், பலர் இறந்துகொண்டிருக்கிறார்கள். நூற்றுக்கணக்கில் மக்கள் காணாமல்போகிறார்கள்.

கடந்த வாரம்தான் முன்னணி போராளிகள் இருவரை இழந்துவிட்ட நிலையில் இந்தப் பிரதேசமே துக்கத்தில் ஆழ்ந்துபோயிருந்தது. இவையும், இவை போன்ற நிலைமைகளும் நம் மக்கள் மனங்களிலிருந்து மறைந்துவிட்டனவோ என்று நம்மில் அநேகர் யோசித்துக்கொண்டிருந்த வேளையில் அந்த ஷெல் குண்டு கோட்டையிலிருந்து ஏவப்பட்டு யாழ். நகரில் வந்து விழுந்தது. குறைந்தது மூன்று பேரை பலி கொண்டது, பலரைக் காயப்படுத்தியது.

மக்கள் சற்று நிதானமாக நடந்துகொண்டிருந்தால் உயிரிழப்புக்களைத் தவிர்த்திருக்கலாம் என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் குண்டு விழுந்த இடம் சனசந்தடி மிக்கதான சந்தைப்பகுதியில் அல்ல, நோயாளிகளும், நோயாளிகளின் உறவினர்களும் அதிகமாகக் காணப்படும் பெரியாஸ்பத்திரியின் முன்னால் என்பதைக் கவனிக்கவேண்டும்.

சில தினங்களுக்கு முன் இப்பகுதியில் ஷெல் விழுந்ததின் காரணமாக யாழ். ஆஸ்பத்திரி ஊழியர்கள் போராட்டம் ஒன்றை நடத்திக்கொண்டிருக்கும் வேளையில், அவர்களை மேலும் ஆத்திரம் கொள்ளச்செய்வதுபோல் இந்தக் குண்டு வீசப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரி ஊழியர்கள் தமது போராட்டத்தைத் தீவிரப்படுத்துவார்களானால் பாதிக்கப்படப்போகிறவர்கள் யாழ்ப்பாண பொது மக்கள் தாம். எனவே அது பற்றி ராணுவத்துக்கோ, அரசாங்கத்துக்கோ கவலையில்லை.

இவ்வாறு அடிக்கடி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியும், அதைச் சூழவுள்ள பிரதேசங்களும் ஷெல் குண்டுகளால் தாக்கப்படுவதும், பொதுமக்கள் உயிரிழம்பதும் வாடிக்கையாகி விட்டுள்ளது.

இதற்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டங்களால் இதுவரை எதுவித பயனும் இல்லை.

யாழ்ப்பாண அரசாங்க அதிபரே இப்படியான தாக்குதல்களிலிருந்து பொதுமக்களைக் காப்பாற்றும் அதிகாரம் தமக்கில்லையென்பதை வெளிப்படையாகக்கூறி வருத்தப்பட்டிருக்கிறார்.

எதுவானாலும் ஒன்றுமட்டும் நிச்சயமாகியுள்ளது. யாழ். பிரதேச மக்கள் அனைவருமே கூடி கரடியாகக் கத்தினாலும் அவர்களுக்கு என்னதான் அநர்த்தங்கள் நேர்ந்தாலும் கோட்டையிலிருந்து ராணுவம் வெளியேறப்போவதில்லை பொது மக்கள் கூடும் இடங்களை நோக்கி குண்டுகளை வீசுவதையும் அவர்கள் நிறுத்தப்போவதில்லை என்பதே அது!

இதேவேளை பொதுமக்கள் இப்பிரதேசத்தின் பிரதான நகரமான யாழ்ப்பாணத்தை தமது அவசிய தேவைகளுக்காக நாடிவருவதையும், முக்கிய சமயங்களில் பெருங்கூட்டமாகக் கூடுவதையும கூட நிறுத்த முடியாதுதான். அதற்காக கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்களால் பொதுமக்கள் அடிக்கடி உயிர் பலியாகிக் கொண்டிருப்பதை எவ்வளவு காலம் பார்த்துக் கொண்டிருப்பது?

இந்நிலையில் மக்களுக்கு அவசியமான பொது சேவைகளில் ஈடுபடும் ஸ்தாபனங்கள், கடைகள் போன்றவற்றை பத்திரமான வேறு இடத்துக்கு மாற்றமுடியுமா? உடனடியாக இல்லாவிடினும் படிப்படியாகவேனும் சாத்தியமாகுமா? அதனால் உயிர்ப் பலிகளை நிறுத்த முடியுமா?

மக்கள் நலனில் அக்கறையுள்ள (ஆஸ்பத்திரி, அரச திணைக்களகங்களின் தலைவர்கள் உட்பட) அனைவரும் தீர்க்கமாக சிந்தித்து ஒரு முடிவுக்குவர வேண்டிய விடயம் இது.

# இலங்கை தமிழ் மக்கள் நெஞ்சங்களில் வாழ்பவர் அன்னை இந்திரா காந்தி

**க. கணேசராசா**

பாரதத்தின் அரசியல் வானில் ஒளி வீசிப் பிரகாசித்த துருவ நட்சத்திரம் அணைந்துவிட்டது. ஆம்! அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, மனித உரிமைகள் மறுக்கப்பட்ட இனங்களுக்கு ல்லாம் ஆதரவாக உலக அரசியல் அரங்கில் ஒலித்த குரல் ஓய்ந்து இன்றுடன் இரு வருடங்களாகிவிட்டன.

முழு இந்தியாவிற்கு மட்டுமன்றி இலங்கையில் தமிழ்மக்களின் உரிமைகள் காலத்திற்குக்காலம் பறிக்கப்படுகின்றன. அவர்கள் இரண்டாந்தரப் பிரஜைகள் ஆக்கப்படுகின்றார்கள். இலங்கையில் பெரும்பான்மை இனம், சிறுபான்மை இனத்தைத் திட்டமிட்ட ரீதியில் அழித்துவருகின்றது என்ற கருத்தை உலக அரங்கில் முதன்முதல் முன்வைத்தவர் என்றவகையில் இலங்கைவாழ் தமிழ்மக்கள் மறைந்த பாரதப் பிரதமரை நன்றியுடன் நினைவு கூறவேண்டியவர்களாக உள்ளனர்.

ஆசிய ஜோதி ஜவகர்லால் நேருவிற்கும், கமலாவிற்கும் மகளாய்ப் பிறந்த செல்வி பிரியதர்ஷினி, சாந்திநிகேதனில் தனது ஆரம்பக் கல்வியையும், பின்னர் இங்கிலாந்திலும், சுவிற்சலாந்திலும் உயர்கல்வியையும் பூர்த்தி செய்தபின்னர் இந்திய அரசியலில் தனது காலடியைப் பதிவைத்தார்.

பார்சியரான பெரோஸ் காந்தியைக் கணவனாகவும் சஞ்சய், ராஜீவ் என்ற இரு புதல்வர்களுக்குத்தாயாகவும் விளங்கும் பேறறைப் பெறற இந்திரா காந்தி சிறந்ததொரு குடும்பத் தலைவியாக மாத்திரமன்றி "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கூற்றிற்கு இலக்கணமாகவும் வாழ்ந்து காட்டினார்.

உலக வரைபடத்தில் "பங்களாதேஷ்" என்ற நாடு உருவாகியதற்கு பிரதான காரணியாக இருந்தவர் அன்னை இந்திராவே என்பதனை எவரும மறுக்க முடியாது. இந்திய—பாகிஸ்தானிய யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளையில் யுத்த அரங்கிற்கு நேரடியாகவே சென்று தேவையான உத்தரவை வழங்கினார் என்றால் இவரின் "அஞ்சாமை" என்னவென்பது.

தனக்கென வாழது பிறருக்காக வாழ்ந்தவர்க்கு மனித சமுதாயம் கொடுக்கும பரிசு துப்பாக்கிக் குண்டுகள்தான் என்றால் அதற்கு இந்திரா மட்டும் விலக்காக முடியுமா என்ன?

ஆம்! மகாத்மாகாந்தி, ஆபிரகாம்லிங்கன் வரிசையில் அன்னை இந்திராவையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பது விதிவகுத்த வழி போலும்,

இந்திராவின் வாழ்க்கையை படமாகத் தயாரிக்க வந்த திரைப்பட இயக்குநர்கள் முன்னிலையில் இந்திராவின் இறுதி அத்தியாயமும் படமாக்கப் பட்டுவிட்டது எந்த மண்ணின் மக்களிற்காக தனது இறுதி மூச்சுவரை வாழ்ந்து வந்தாரோ அந்த மண்ணிலேயே இந்திராவின் உடல் துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்டது

இந்திராவின் உடலை துப்பாக்கிக்குண்டுகள் அழித்திருக்கலாம். ஆனால் அவரின் இலட்சியத்தை அவரின் தேசாபிமானத்தை அவரின் மனித நேயத்தை துப்பாக்கிக் குண்டுகளால் அழிக்க முடியாது. முடியவில்லை. உலகின் மனித இனம் வாழும் வரை இந்திராவும் மனிதர் இதயங்களில் ஆட்சி புரிந்து கொண்டிருப்பார்.

## க. பொ. த. (சா த) போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், வெள்ளி

காரைநகரிலிருந்து க. பொ த. (சாதாரணம்) பரீட்சைக்கு தோன்றும் மாணவர்களுக்கு விஞ்ஞான, கணித பாடங்களில் போட்டிப் பரீட்சையொன்றை நடாத்த வாரிவளவு நல்லியக்க சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

1986 டிசம்பர் மாதம் நடைபெறும் மேற்படி பரீட்சைக்குத் தோன்றும் இப்பகுதி மாணவர்களுக்கான விஞ்ஞான கணித பாட பரீட்சை அடுத்தமாதம் 15ம், 16ம் திகதிகளில் யாழ்ற்றன் கல்லூரியில் நடைபெறும்.

பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படுமென தெரிவிக்கப்படுகின்றது. (சி)

## இராமகிருஷ்ண பரமஹம்சர்— "சமயத்துறையில் புதிய சகாப்தத்தை உருவாக்கினர்"

நெல்லியடி, வியாழன்

"தான்கண்ட கடவுளை உலகுக்கும் காட்டி, சமயத்துறையில ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கிய பெருமை பகவான் இராமகிருஷ்ண பரமஹம்சருக்கே உரியது. அந்தஞான ஒளி இன்று உலகெங்கும்பரவி வருகிறது".

இவ்வாறு பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா மதவாச்சிரம கிருஷ்ண ஜெயந்தி விழாவில் உரையாற்றிய யாழ் வளாக பேராசிரியர்கலாநிதி சுப்பிரமணியன் உரையாற்றும்போது கூறினார்.

சுவாமி சித் ரூ ானந்தா தமது தலைமையுரையில் கூறியதாவது!

"மக்கள்படும் துன்பங்களைக் கண்டு மனம் துடிக்காதவன் தான்சமயவாழ்வு வாழ்வதாகக் கூறினால் அதிலும் பார்க்க நகைச் சுவையூட்டக் கூடியது ஒன்றுமில்லை"

அண்மையில் அகால மரணமான குரும்பசிட்டியைச் சேர்ந்த செபஸ்தியான் பிள்ளையின் நான்குமாதக் கர்ப்பிணியான மனைவிக்கும், அல்வாய்தெற்கு கணவனையிழந்த செல்வநாயகம் நளினிக்கும், மற்றும் விதவைகளுக்கும் பணமுடிப்பும், பாலமாவும், புடவைகள் ஆகியவையும் வழங்கப்பட்டன. சுமார் 25 பாடசாலை மாணவருக்குச் சீருடைகளும் வழங்கப்பட்டன.

வடஇந்துமகளிர்கல்லூரி அதிபர் திருமதி சி சுப்பிரமணியம் அன்பளிப்புகளை வழங்கினர். (வா)

## "அரசபடையினர் சமாதான தினத்தை மீறியது அநாகரீகமான செயல்"

நெல்லியடி, வியா

"பரிசுத்த பாப்பரசரின் வேண்டுகோளுக்கமைய கடந்த 27ம் திகதி திங்கட்கிழமை அகில உலகிலுமே அமைதியும் சமாதானமும் நிலவவேண்டுமென்ற பாப்பரசரின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட இலங்கை அரசின் இராணுவம் யுத்த நிறுத்தலை மீறியமை மிக அசௌகரியமானதும் உலகின் மனச்சாட்சியை உறுத்தக் கூடியதுமான செயலாகும்"

என்று பருத்தித்துறை பிரஜைகள் குழுவின் தலைவர் திரு ஜே. ஜீ. இராசேந்திரம் கூறினார்.

இது பற்றி இலங்கையிலுள்ள பாப்பரசரின் பிரதிநிதிகளுக்கும் மற்றும் கத்தோலிக்க நாடுகளின் தூதுவருக்கும் யாழ். ஆயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி வ. தியோகுப்பிள்ளைக்கும் திரு. இராஜேந்திரம் அறிவிக்கவுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

## கந்தசஷ்டி

பண்டத்தரிப்பு, வியா

மாதகல் நுணசை முருகமூர்த்தி ஆலயத்தில் கந்தஷ்டி உற்சவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. ஆறுதினங்கள் தொடர்ந்து நடைபெறவுள்ள இந்த உற்சவத்தில் இப்பகுதியில் கந்த சஷ்டி விரதம் அனுட்டிக்கும் பெருந்தொகையானபக்தர்கள் கலந்துகொண்டு வழிபாடு செய்வார்கள். அதனை அடுத்து அடுத்தமாதம் 7ம்திகதி வெள்ளிக்கிழமை சூரசங்கார உற்சவம் நடைபெறும்.

## மீண்டும் இயங்க நடவடிக்கை

கொழும்புத்துறை, வெள்

சிலவருடகாலமாக இயங்காதிருக்கும் யாழ் திரைபபட வட்டத்தை மீண்டும செயற்பட வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

சர்வதேசரீதியில் புகழப்படுகின்ற கலைத்தரமுள்ள திரைப்படங்களைத் திரையிடுவதையும், நல்ல திரைப்பட ரசனையை, திரைப்படம் பற்றிய அறிவை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்ட இத்திரைப்பட வட்டம் இயங்கிய போது பலபிறமொழித்திரைப்படங்கள் திரையிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தற்போது யாழ். திரைப்பட வட்டம் அடுத்தமாதம் ஒவ்வொரு நிகழ்ச்சிகளை நடாத்தத் திட்டமிட்டுள்ளது இதன் முதல் நிகழ்ச்சியாக வங்காளத் திரைப்பட நெறியாளரும் சர்வதேச கணிப்பைப் பெற்றவருமான சத்யஜித்ரேயின் திரைப்படமொன்று காண்பிக்கப்படவுள்ளது. (ஊ)

## உதைபந்தாட்டம்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

விளையாட்டுக்கழகங்கள் பங்கு பற்றுகின்றன. இருபிரிவாக நடாத்தப்படும் இப்போட்டியின் இறுதியாட்டங்கள் அடுத்தமாதம் நடுப்பகுதியில் நடைபெறும்.

இப்போட்டிகள் அனைத்தும் யாழ் ஒஸ்மானியாக் கல்லூரி மைதானத்தில நடைபெறுகின்றன. (வி)

## சுகாதார...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

காலத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களின பங்கு மிகவும் அவசியமானது. இந்நிலையத்தில் கடமையாற்றும் தொண்டர்கள் ஆரம்ப சுகாதார நிலைய தொண்டுகளை மக்களுக்கு சிறந்த முறையில் ஆற்றி சிறுவர்களை தேகாரோக்கிய முள்ள வீரர்களாக வளர்க்க வேண்டும் என்றுர்,


## ஆட்டிறைச்சி பிரியர்களுக்கு விசேஷ அறிவித்தல்

கடந்த 14 வருடங்களாக நன் மதிப்பு பெற்ற உரும்பராய் சந்தை ஆட்டிறைச்சிக் கடையிலும், பலாலி ரோட்டிலுள்ள கோண்டாவில் கடையிலும் தீபாவளிபண்டிகையை முன்னிட்டு காலை 6-00 மணி தொடக்கம் நண்பகல் 1-30 மணிவரை மிகவும் தரமான ஆட்டிறைச்சி விற்பனை செய்யப்படும். போதியளவு ஊர்க்கிடாய்கள் கையிருப்பில் இருப்பதால் தட்டுப்பாடின்றி தேவையானளவு இறைச்சி மொத்தமாகவும் சில்லறையாகவும்பெற்றுக் கொள்ளலாம். எமது வாடிக்கையாளரின் நலன் கருதி இவ்வொழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. தொடர்ந்து விசேஷ தினங்களில் இவ்வொழுங்கு கடைப் பிடிக்கப்படும். எமது ஸ்தாபனத்திற்கு ஒரு முறை விஜயம் செய்தால் உண்மையை புரிந்து கொள்வீர்கள்.

இப்படிக்கு,
உரிமையாளர்,
உரும்பராய்,
கோண்டாவில்,
ஆட்டிறைச்சிக்கடை.
C 5520)



## காணவில்லை



அம்பலவாணர் நடராஜா

அம்பலவாணர் நடராஜா என்பவரை 7-10-86 தொடக்கம் ஒட்டிசுட்டான் வர்த்தகரைக் காணவில்லை. இவர் பொதுநிறம் உடையவர் மெலிந்த தோற்றமுடையவர். இவரைக் கண்டவர்கள் கீழ் உள்ள முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம வழங்கப்படும். A. ஆச்சிக்குட்டி (தாயார்) 144, ஆஸ்பத்திரி வீதி, (நியூமார்க்கற்) யாழ்ப்பாணம்.

C 5518



## 31-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி சியாமளா புஷ்பராசா

ஜனனம்: 09-04-1951
மரணம்: 01-10-1986

தலைமகளே குலமகளே தாரத்தின் தத்துவம்மிலை மதிக்க முடியாத விஞ்ஞான வித்தகியே உயிரனைய ஒரே மகளை உத்தமனும் அண்ணவனை பெற்றுப் பெயர் வைத்த நற்றுயை நங்கையர் நான்கு தங்கையரை தங்கத் தம்பியை தவிக்க விட்டு ஏகினையோ, தலைவன் தான் கடமையே கடவுள் என்பாய் கருத்தெல்லாம் கல்விக் கூடம் வீதியில் விரோதி என்று பாதையை மாற்றிச் சென்றுய் பாதகன்காலன் பறித்திட வேதனைக் கடலில் நாங்கள் விழுந்து அழிந்தோம் ஐயோ!

பிரிவாற்றுத,
குடும்பத்தினர்.

C 5515


## இராணுவத்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிக்கு அவர் எடுத்துச் செல்லப்பட்டு அவசர சத்திர சிகிச்சையின் பின் மரணமானுர்.

துப்பாக்கிச் சூட்டுக்காயத்துடன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட மாணவன் விபுலானந்தனின் உடலிலிருந்து துப்பாக்கி ரவை ஒன்று எடுக்கப்பட்டது.

### கவலையுடன் ஆசிரியர் மாணவர், பெற்றேர்

யாழ். மத்திய கல்லூரி அதிபர், வே. பாலசுந்தரம் உப அதிபர், மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள அனைவரும் ஆஸ்பத்திரி சத்திர சிகிச்சை மண்டபத்துக்கண்மையில் கவலையுடன் நின்றிருந்தனர்.

செல்வன் விபுலானந்தனின் பெற்றேர்களும். உறவினர்களும் கண்ணீரும் கம்பலையுமாகக்காட்சி அளித்தனர்.

### சக மாணவ தலைவன் மூர்ச்சித்து வீழ்ந்தார்

ஆஸ்பத்திரி சத்திரசிகிச்சை மண்டபத்திற்கு வெளியே காணப்பட்ட சனக்கூட்டத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான விபுலானந்தனின் மரணச்செய்தியைக் கேட்டவுடன் சக மாணவ தலைவன் கிருபைராஜன் மூர்சித்து வீழ்ந்தார் அவருக்கு சகமாணவர்கள் முதலுதவிச் சிகிச்சை அளித்தனர்.

### பெற்றேர் கதறினர்

மரணமடைந்த செய்தியை கேள்வியுற்ற தாய், தந்தையர், "ஐயோ மகனே எங்களைவிட்டுபோய்விட்டாயா?" காலையில் சென்ற உன்னை நிழல் மறையுமுன் எப்படி பிணமாகக் கொண்டு செல்வேன் என்று சதறியழுததைக் கண்ணுற்ற அனைவரது கண்களும் கண்ணீர்த் துளிகளால் நிறைந்தன.

### பாடசாலைகள் மூடப்பட்டன

மாணவ தலைவர் பலியானதை அறிந்ததும் யாழ். மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகியன உடனடியாக மூடப்பட்டன.

துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியான மாணவன் விபுலானந்தனின் சொந்த ஊர் காரைநகராகும்.

## இன்று...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தூரியார் வீதி இல்லத்தில் வைக்ப்பட்டிருக்கும்.

யாழ் மத்திய கல்லூரி மாணவர்கள் இன்று காலை எட்டு மணியளவில் கல்லூரி முன்றலில் இருந்து மௌன ஊர்வலமாக வந்து துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான மாணவன் பொ விபுலானந்தனின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு மாணவ தலைவர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்

இவர் சிறந்த ஒரு மிருதங்க இளங் கலைஞர். வார் யாழ். மத்தியகல்லூரி மாணவ தலைவனு மட்டுமல்லாமல் சிறந்த விளையாட்டு வீரருமான விபுலானந்தன் வியோ கழகம், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் ஆகியவற்றில் அங்கத்துவம் வகித்து வருகிறுர். (வா-கே)


## எமது புதிய வெளியீடுகள்

1. சிவாஜி, T. R. மகாலிங்கம், பத்மினி "ஸ்ரீ வள்ளி" (Pyramid Master)
2. சரிதா நடித்த K. பாலச்சந்தரின் "கல்யாண அகதிகள்" (Pyramid Master)
3. ஜெய்சங்கர், டிம்பிள்கபாடி, சுதர்சன் "கிழக்கும் மேற்கும் சந்திக்கின்றன" (Suhan Master)

எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேம்.

குணம் வீடியோ சென்ரர்,
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665

[A-2840]



## சிங்கள அச்சுக்கோர்ப்பாளர் தேவை

சிங்கள அச்சுக்கோர்ப்பாளர்கள் உடனடியாகத் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும் எம்முடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். அல்லது புலிகளின் குரல் செய்திப் பலகையுடன் உள்ள தபால் பெட்டியில் விண்ணப்பங்களைப் போடவும்.

– விடுதலைப் புலிகள்

[C-5523]



## A/L 87

தூய பிரயோக கணிதம்
துரிதமீட்டல் பகல்நேர வகுப்பு

ஆரம்பம்: 5-11-86

7-45: காவிகள்
9-00: அட்சரகணிதம் (கணக்குகள் மாத்திரம்)

ஆசிரியர்:
ரவிமோகன்
யாழ்ப்பாணம்.
வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

[C-5514]



## விக்ரு

டியூசன் சென்ரர்,
52 ஸ்ரான்லி ரேட்,
யாழ்ப்பாணம்.

[கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்.]

(மீட்டல் வகுப்புக்கள்)

A/L 87 DAY CLASSES

ஆரம்பம்: 03-11-86 காலை 8 மணி

Sat., Sun. CLASSES

ஆரம்பம்: 9-11-86 பகல் 12 மணி

முற்குறிப்பு:-

★ யாழ். நகரில் கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் பெற்ற ஆசிரியர் குழு ஒன்றிணைந்து நடாத்தும் ஒரே நிறுவனம் இதுவாகும்.

★ கலை, வர்த்தக வகுப்புக்கள் இந்நிறுவனத்தில் மட்டுமே சிறப்பாக நடைபெறுகின்றது.

[A-2826]



## அன்னை இந்திராவின் 2-வது நினைவஞ்சலி



அடக்கி ஒடுக்கப்படும் மக்கள் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் அவர்களின் நியாயமான உரிமைகளுக்காக விடுதலைக்காக குரல் கொடுத்து வந்த அன்னை இந்திராவின் இரண்டாவது நினைவுக் காணிக்கை.

தேவர் குலம் நலன்புரிச் சங்கம்,
05, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

[C-5512]



## வெலிங்டன்

10-30 2-30 4-30, 6-30
MAD MAX BEYOND THUNDER DOME
Sex Action
[Adults Only]

தீபாவளி வெளியீடு
சிவகுமார்-ராதிகா நடித்த
நிலவு சுடுவதில்லை

## லிடோ

இன்று முதல்
10-30, 2-30 4-30, 6-30

HolCroft Convenant
[Full of Suspense and Action] [Color]

புலிகளால் கைது செய்யப்பட்ட சிப்பாய்களை———

# ராணுவ நடவடிக்கை மூலம் 'லலித்' மீட்கவுள்ளாராம்

(அலுவலக நிருபர்)

'அடம்பனில் கைதாகி விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள இரு சிப்பாய்களையும் இராணுவ நடவடிக்கை மூலம் மீட்கப் போவதாக தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி தம்மிடம் கூறியுள்ளதாக ஸ்ரீலங்கா மக்கள் கட்சி செயலாளர் திரு. விஜயகுமாரணதுங்கா தெரிவித்தார்

தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ் குடாநாட்டுத் தளபதி திரு. கிட்டு நேற்றுக்காலை தொலைபேசி மூலம் திரு விஜயகுமாரணதுங்காவுடன் தொடர்பு கொண்டபோது மேற்குறிப்பிட்ட தகவல் தெரிவிக்கப்பட்டது.

தளபதி திரு. கிட்டு கொழும்பிலுள்ள திரு விஜயகுமாரணதுங்காவுடன் சில மணி நேரம் தொலைபேசியில் உரையாடினார். அத்தொலைபேசி உரையாடல் வருமாறு!

திரு. கிட்டு: உங்களுடைய அடுத்த யாழ்ப்பாண விஜயம் எப்போது?

திரு. விஜயகுமாரணதுங்க: நானும் இரு இராணுவத்தினரின் பெற்றோருமாக விமான மூலம் உவ்விடம் வர இருந்தோம் ஆனல் பலாலியில் எமது விமானம் இறங்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது விரைவில் பஸ்ஸில் உவ்விடம் வருவதற்கு முடிவு செய்துள்ளோம்.

திரு. கிட்டு: நீங்கள் வரும் பொழுது உங்களது மனைவி சந்திரிகா குமாரணதுங்காவையும் அழைத்து வாருங்களேன்

திரு. குமாரணதுங்க: நிச்சயமாக அழைத்துவருகிறேன்.

திரு கிட்டு: நாங்கள் விடுத்த நிபந்தனை குறித்து பாதுகாப்பு அமைச்சு என்ன சொல்கிறது

## 'வி.ஜே' தகவல்

திரு விஜயகுமாரணதுங்க: இராணுவ நடவடிக்கை மூலம் இப்பிரச்னையைத் தீர்க்க விரும்புவதாக திரு. அத்துலத்முதலி சொல்கிறார்.

திரு கிட்டு: அப்படியானல் தாராளமாக அத்தீர்வை வரவேற்கிறோம். அதற்குப் பதிலடி கொடுக்கவும் தயாராக இருக்கிறோம்.

### 50 ஆயிரம் சிங்களவர் மகஜர்

திரு விஜயகுமாரணதுங்க: உங்களால் கைதுசெய்யப்பட்ட இரு இராணுவத்தினர் சம்பந்தமாக விடுத்த நிபந்தனையைஏற்று, அவ்விருவரையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு சுமார் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட சிங்கள மக்கள் கையொப்பமிட்டு ஜனாதிபதிக்கு மகஜர்கள் அனுப்பியுள்ளார்கள்,

நான் யாழ்ப்பாணம் வந்து திரும்பியது தென் இலங்கையில் பெரிய விஷயமாகிவிட்டது.

எனது யாழ்ப்பாண விஜயம் மற்றும் உங்கள் சந்திப்பு சம்பந்தமாக நீங்கள் தந்துதவிய வீடியோ படப் பிரதியை 100க்கு மேற்பட்ட பிரதிகளாக்கி சிங்களமக்கள் மத்தியில் திரையிட்டு வருகிறேன்.

சிங்கள மக்கள் இப்பொழுது உங்கள் உண்மை நிலையை உணரத்தொடங்கியுள்ளனர்.


இதுசம்பந்தமான உண்மை நிலையை விளக்கி பல பொதுக் கூட்டங்கள் வைத்து வருகின்றேன், பெருந்தொகையான சிங்களமக்கள் இக்கூட்டங்களில் கலந்துகொள்கிறார்கள்.

### லலித் கோபம்

உங்கள் விடுதலைப் போராட்டம் பற்றிய உண்மை நிலை விளக்கத்துக்கு வரும் சிங்கள மக்களின் கூட்டத்தை நினைத்துப்போலும் திரு லலித் அத்துலத்முதலி என்மீது கோபமாக இருக்கிறார்.

திரு கிட்டு: சரி விரைவில் வாருங்கோ நேரில் சந்தித்துப் பேசிக்கொள்ளுவோம்.

திரு. விஜயகுமாரணதுங்க: நன்றி! வணக்கம்! (மா)



உதைபந்தாட்டப் போட்டியில்

# நெல்லியடி — கரவெட்டி கல்லூரிகள் வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

மாணவர் முன்னணியும், மறுமலர்ச்சிக்கழகமும் இணைந்து யாழ் மாவட்ட பாடசாலைகளிடையே நடத்திவரும் உதைபந்தாட்ட "நொக் அவுட்" போட்டியில் 5ம் நாள் ஆட்டத்தில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியும், நெல்லியடி மத்தியமகா வித்தியாலயமும் வெற்றிபெற்றுள்ளன

### கரவெட்டி வெற்றி

கரவெட்டிவிக்கினேஸ்வராக் கல்லூரிக்கும் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், விக்கினேஸ்வராக் கல்லூரி 5—0 கோல்களால் வெற்றிபெற்றது விக்கினேஸ்வரா வீரர்களான சிவகுமார். ராஜ்குமார் தலா இருகோல்களையும். தவராசா ஒருகோலையும் போட்டார்கள்.

இப்போட்டிக்கு திரு ஜோதிரவி மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

### நெல்லியடி வெற்றி

நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்துக்கும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் நெல்லியடி வித்தியாலயம் 5—1 கோல்களால் வெற்றிபெற்றது. நெல்லியடி வித்தியாலயத்தின் சார்பில் பரநிருபராஜா 3 கோல்களையும், ராஜசேகர். கோபிகிருஷ்ணன்தலா ஒரு கோலையும் போட்டார்கள்.

இப்போட்டிக்கு திரு கமலநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்

இவ்விருபோட்டிகளும் நெல்லியடி மத்தியமகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன.

### நாளைய ஆட்டம்

மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நாளை நடைபெறும் இரு ஆட்டங்களில், முதலில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை எதிர்த்து சாவகச்சேரி இந்துக் கல்லூரி மோதும்.

2-வது ஆட்டத்தில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியைஎதிர்த்து மானிப்பாய் இந்துக்கல்லூரி மோதும்.

(வி)

## ஷெல் தாக்குதலை கண்டித்து ஊர்வலம்

நல்லூர், வியாழன்

யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் யாழ் போதனா வைத்தியசாலையில் கடமை புரியும் யாழ் பல்கலைக் கழக ஊழியர் ஒருவரும் காயமடைந்துள்ளார்.

இச் சம்பவத்தைக் கண்டித்து யாழ் பல்கலைக் கழக ஊழியர்கள் இன்று வெளிநடப்புச் செய்து ஆட்சேப ஊர்வலமொன்றையும் பொதுக் கூட்டமொன்றையும் நடாத்தினார்கள்.

யாழ் போதனா வைத்தியசாலையில் மகப்பேற்றுப் பிரிவில் கடமையாற்றும் குமாரசிங்கம் என்பவரே தனது கடமைக்குச் சென்றுகொண்டிருக்கும் போது தாக்குதலுக்கு இலக்கானார் [கே]

பருத்தித்துறை

பலநோக்குக்கூட்டுறவுச்சங்கம்(வ/து)

பருத்தித்துறை

விளம்பரம்

## பதவி வெற்றிடம்

### பொது முகாமையாளர் (101.8) நிரந்தரம்

மேற்படி பதவி வெற்றிடத்திற்கு கீழ்க்காணும் தகுதிகளையுடைய இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணப்பப் பத்திரத்தை தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(1) வயது

18க்கும் 40க்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) கல்வித் தகைமை

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 9வது சம்பளத் திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 03 வருடத்திற்குக் குறையாத அனுபவம். அல்லதுகூட்டுறவுப் பணியாளரின் 10வது சம்பளத் திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம்: 6 வருட அனுபவம்.

அல்லது

[ஆ] அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ தொழில் நுட்ப ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 01 வருடத்திற்குக் குறையாத அனுபவம்,

அல்லது

[இ] கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் [உயர்தரம்] க.பொ த. [உயர்தரம்] ல் 3 பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில் நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

(3) வேதனம்

ரூபா 500 — 20 x 5 — 30 x 8 — 840

(4) விண்ணப்பமுடிவுதிகதி

15- 11- 1986

அண்மையில் பெற்ற இரு நற்சான்றுப் பத்திரங்கள், கல்விச் சான்றிதழ்கள், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், வதிவுத் தகைமைச் சான்றிதழ், ஆகியவற்றின் பிரதிகளுடன் விண்ணப்பப் பத்தரம் பதிவுத் தபால் மூலம், 'தலைவர், பருத்தித்துறை ப.நோ. கூ சங்கம், பருத்தித்துறை' என்ற முகவரிக்கு 15-11-1986ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் தபாலுறையில் இடதுபக்க மேல் மூலையில் "பொதுமுகாமையாளர் (101 8] பதவிக்கான விண்ணப்பம் என்று குறிப்பிடுதல் வேண்டும்.

முக்கிய குறிப்பு:

அனுபவத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படும். [திறமையின் அடிப்படையில் ஊக்குவிப்புப்படிகள் உட்பட ஆகக்குறைந்தது ரூபா 1500/- ஆயிரத்தி ஐந்நூறுக்குக் குறையாத மொத்தச்சம்பளம் வழங்கப்படும்.

தலைவர்.

பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கம்,
பருத்தித்துறை. (A3026)


பவர்ஸ் உரம்

அதிக விளைச்சலுக்கும்
கூடியஇலாபத்துக்கும்

A B C

MASTERS ABC 4/82

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்

க. பெ. 11, கொழும்பு - 1, தொலைபேசி: 20551-6

ரூபா 2,000/க்கும்மேல்

### “ராணுவத்தின் இனவெறி போராட்டம்

# ஆழமான வடுவை ஏற்படுத்தினாலும்

# நாம் மனிதநேயத்தைக் கைவிடவில்லை”

## ராணுவத்தினருக்கு புலிகளின் கடிதம்

யாழ்ப்பாணம் வெள்ளி

“சிறிலங்கா சிங்கள முதலாளித்துவ அரசு எம் இனத்தின் மீது திணித்துள்ள சமூக, பொருளாதார, கல்வி அடக்குமுறைகளின் உச்ச வடிவத்தின் பின் நாம் பிரிந்துபோகத் தீர்மானித்து தனித் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்த போது அதனை நசுக்கவே சிறிலங்கா அரசு உன்னைப் பயன்படுத்தத் தொடங்கியது. நீயும் சுயசிந்தனையின்றி இம் மண்ணில் புரிந்த கொலைகளும் நாசகாரவேலைகளும் ஏராளம். நீ இம் மண்ணில் புரிந்துவரும் இனவெறிப் போராட்டம் எம் மனதில் ஆழமான வடுக்களை ஏற்படுத்தியபோதும் நாம் எச் சந்தர்ப்பத்திலும் மனித நேயத்தையோ மனிதாபிமானத்தையோ கைவிடவில்லை. இதே நேரம் நாம் எம்மக்களை பாதுகாக்க சிலவரலாற்று ரீதியிலான நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது தவிர்க்க முடியாததாகிறது.”

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளினால் ‘சிறிலங்கா ராணுவ வீரனே!” எனத் தலைப்பிட்டு சிங்களத்தில் அனுப்பப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக் கடிதம் சகல முகாம்களுக்கும் அரச அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது இக்கடிதத்தின் சாராம்சம் வருமாறு:

“உனது உலகம் மிகக் குறுகியதாகவும் உனதுகுடும்பம் மிக ஏழ்மையாகவும் இருப்பதால் நீ ஏமாற்றப்படுகிறாய். அல்லது ஏமாற்றப்படும் நிலைக்குத் தள்ளப்படுகிறாய். இன்று வரை நீ இப்போராட்டத்தின் ஒரு பக்கத்தைத்தான் பார்த்திருப்பாய். சிறிலங்கா அரசு உனக்கு ஊட்டி வளர்த்த இனவாதத்தையும் அதுதரும் டணத்தையும்தான் எண்ணிப் பார்த்திருப்பாய்.

“உனக்கு நாமும் எம்மக்களும் ஒரு கொடிய ‘எதிரிகளாகவே’ சித்தரிக்கப்பட்டிருப்போம். ஆனால் அந்த எதிரிகளுக்கு உன்னைப்பற்றியும் உன் கடின வாழ்வைப் பற்றியும் நிச்சயமாக புரியும். உனது நிலையை உனதுகுடும்பநிலையை, உனது ஏழ்மையான வாழ்வை முகாமின் நாலு சுவருக்குள் வாழும் வாழ்வை நேருக்கு நேர் சந்திக்கும் துப்பாக்கிக் குண்டுகளை மரணத்தை நேருக்கு நேர் சந்தித்து மட்டுமட்டாக அதிலிருந்துவிலகி தொடர்ந்தும் மரணத்துடன் போராடும் உனது வாழ்வை அனைத்தையும் நாம் புரிந்துகொள்வோம் நாமும் உன்னைப்போல் தினசரிசண்டைபோடும் ‘போர் வீரர்கள்’ என்பதோடு தூய இலட்சியத்திற்காகப் போராடும் ‘விடுதலைப் போராளிகள்’ என்பதால் உன்னையும் உன் சகாக்களையும் எம்மால் உணர்ந்துகொள்ளமுடியும்.

“மரணத்தை வென்றவன் தூய்மையானவனாகத் தான் இருக்கமுடியும். இந்த வகையில் சிங்கள இனத்தாரிடையே நாம் முதலாவது நம்புவது உன்னைத்தான். உன் மரணத்தில் உல்லாச வாழ்க்கை வாழும் சிங்கள அரசியல்வாதிகளையல்ல ஆனால் நாம் சண்டையிடுவது தவிர்க்கமுடியாது. எம்மக்களை எம்மண்ணை ஆக்கிரமித்துள்ள உன்னை விரட்டும் வரை எமது துப்பாக்கிகள் ஓயாதுசுனன்றுகொண்டே இருக்கும்.

“உனது பிறந்த இடமாகிய சிங்கள சிறிலங்காவில் உன்னால் சுதந்திரமாக வாழமுடியும் ஆனால்எமது பாரம்பரியபிரதேசத்தில் நாம் பிறந்த இடத்திலேயே எம்மை அடக்கி ஒடுக்கி வரும் சிறிலங்கா அரசையும் அடக்குமுறைக் கருவியாகிய உன்னையும் சகித்துக் கொண்டு எம்மால் வாழ முடியாது

“ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் வரலாற்றில் அரச படைகளுடனான மோதலில் சரணடைந்தவர்கள் அல்லது கைது செய்யப்பட்டவர்கள் துன்புறுத்தப்பட்டதோ அல்லது கொல்லப்பட்டதோ கிடையாது. இந்த வரலாற்றுண்மையை யாரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. எம்மை நோக்கிச் சுட்டவர்களைக்கூட நாம் கைது செய்து துன்புறுத்தாமல் விடுதலை செய்திருக்கிறோம். ஓர் தெளிவான தூய சிந்தனையில் நடைபெறும் எமது போராட்டத்தில் சரணடையும் அரசபடையினர் எப்போதும் துன்புறுத்தப்படாமல் விடுவிக்கப்படுவர்.

“இந்தவகையில் ஏற்கனவே 10-4-85ல் யாழ் பொலிஸ் நிலையத்தில் கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள், 10-5-85ல் மன்னார் பொலிஸ் நிலையத்தில் கைது செய்யப்பட்ட சுனில் பண்டார, மைக்கல் பெர்னாண்டோ, 28-8-86 ஆனையிறவுராணுவமுகாம் சிப்பாய்களாகிய பிரேமரட்ண மங்கல ஆகியோர் எதுவித துன்புறுத்தலுமின்றி விடுவிக்கப்பட்டனர்.

இவைகளைத் தொடர்ந்து மன்னார் அடம்பனில் இடம்பெற்ற நேரடி மோதலில் சிறிலங்கா இராணுவத்தின் 16 உடல்களையும் இரு இராணுவ வீரர்களையும் கைப்பற்றினோம். அன்றுதான் மன்னார் பிராந்திய தளபதி விக்ரர் வீரமரணமடைந்தான். இப்போர் வரலாற்றில் ஓர் சிறு சம்பவமான போதும் இது பல திருப்புமுனைகளை ஏற்படுத்தியது சிறிலங்கா அரசு காலங்காலமாக பூண்டுவந்த பொய்வேடத்தை அம்பலமாக்கியது உனக்கு தெரியாமல் சிறிலங்கா அரசுமூடிமறைத்த உண்மைகள் அல்லது மூடி மறைக்க எண்ணிய செய்திகள் உண்மையென நிரூபிக்கப்பட்டது

“இப்போரில் கைப்பற்றிய உடல்களில் கையளிக்கக்கூடிய நிலையிலிருந்த 9 உடல்களையும் யாழ். கோட்டை இராணுவ முகாமில் நேரடியாகக் கையளித்தோம். தொடர்ந்தும் இராணுவத்துடனான மோதலில் கைப்பற்றும் உடல்களையும் நிச்சயம் கையளிப்போம். இதே நேரம் உன்னால் கைதுசெய்யப்படும் போராளிகள், மக்கள் சிறிலங்கா அரசின் ஆணைப்படி உன்னால்கோரமாக தாக்கப்படுவதும், கொல்லப்படுவதும் மிகச்சாதாரணம். இந்தவகையில் நாம் வெவ்வேறுநோக்கத்திற்காக சண்டைபோடுகிறோம், கடும்சமர்புரிகிறோம், உயிரைக்கொடுக்கிறோம்.

“சண்டை நியாயத்திற்கானதோ, அநியாயத்திற்கானதோ பயங்கரவாதத்திற்கானதோ பயங்கரவாதத்திற்கெதிரானதோ எதுவானும் இழக்கப்படும் உயிர்கள் மனித உயிர்கள்தான். நீயும்ஓர்போர் வீரன் என்பதால் யுத்தத்தில் இறக்கும் ஓர் போர் வீரனது இறுதிஆசை உனக்குப்புரியும் தன் உடல் அழுகி ஒழுகாமல் அடக்கம் செய்யப்பட வேண்டும் எனும் அவனின் ஆசை நியாயமானதே.

“மேலும்இப்போர் வீரனது தாய்’ தந்தையின்இறுதி ஆசையாக அமைவதும் தன்மகனின் உடல் இறந்தபிறகாவது தமக்குரிமையாக வேண்டும் என்பதாகும். நாம் இப்போரில் வீரமரணமடைகிறோம். ஆனால் நீ வீட்டுநிலைமைக்காக மரணிக்கிறாய். அனைவரும் மனிதகுலத்தைச் சேர்ந்தவர்கள் எனவே ஓர் சாதாரண சராசரி மனிதாபிமான அடிப்படையில் இவ் இராணுவத்தின் சடலங்கள் எம்மால் கையளிக்கப்பட்டன. இம்மிகச் சாதாரண மனிதாபிமானத்தை நாம் இறுதிவரை கடைப்பிடிப்போமென உனக்கு உறுதியளிக்கிறோம்.

‘மேலும் அடம்பனில்ஆயுதபாணிகளாகப் போரிட்ட இரு இராணுவத்தினர் யுத்தகைதிகளாக கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்குரிய வசதியளித்து தகுந்த வைத்திய பராமரிப்புடன் நாம் பாதுகாத்து வருகிறோம்

“நீ இச்சண்டைகளில் நாட்டுக்காகவோ அல்லது கூலிக்காகவோ போரிட்டு மடிந்தாலும் அல்லது சிறைப்பிடிக்கப்பட்டாலும் இம் முதலாளித்துவ அரசுகள் அதை அலட்டிக் கொள்ளப்போவதில்லை என தெளிவாக நீயே உணர்ந்து கொள்ளலாம்.

“அடம்பன் மோதலில் 12ம் திகதியன்றே 10 இராணுவ உடல்களும் இரு இராணுவ வீரர்களும் பிடிக்கப்பட்டனர். ஆனால் சிறிலங்கா அரசு ஓரிரு இராணுவத்தினரே கொல்லப்பட்டதாக செய்தி வெளியிட்டதும் இன்றுவரை கைதுசெய்யப்பட்ட இராணுவத்தினரை விடுவிக்க எந்த சிறுமுயற்சியையும் புரியாதும் இராணுவ வீரர்களின் உயிரைமுதலாளித்துவ அரசு துளியும் கணக்கெடுக்கவே இல்லை என்பதையே சுட்டிக் காட்டுகிறது.

“இதேபோன்று இதுவரை இறந்த நூற்றுக்கணக்கான இராணுவத்தினரின் முகவரியை வெளிப்படுத்தாமல் மூடி மறைக்கும் பணியையும் சிங்கள முதலாளித்துவ அரசுகள் திறம்பட செய்துவந்துள்ளமை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது.

“நீயே உன் வாழ்நாளில் எமது போராட்டத்தின் வளர்ச்சிப்படிமுறைகளை அவதானித்திருப்பாய் அல்லது நேரடியாக உணர்ந்திருப்பாய். நீ புரியும் ஒவ்வோர் கொலையும் போராட்டத்தை பலமடங்கு வளர்த்துத்தான் வருகிறது. நீ இராணுவரீதியில் தொடர்ந்துபலம் பெற்றுவந்த போதும் எமது போராட்டத்தின் படிப்படியான படிமுறை வளர்ச்சிகள் வெற்றிகள் இன்று உன்னை முகாமிற்குள் முடக்கியிருக்கிறது. இன்று நீ உயரிய இலட்சியமாகிய தமிழீழ விடுதலைப் போராட்டத்தால் முறியடிக்கப்பட்டு வருகிறாய் இதே நிலையில் காலப்போக்கில் நீ விரட்டியடிக்கப்படுவது உறுதி

“எனவே நீ இம்முதலாளித்துவ அரசைபாதுகாக்க வீணே சண்டையிட்டுமடியாதே. நேரடிப் போரில் நீ சரணடையும் போது உனதுஉயிரிற்கும்உனது பாதுகாப்பிற்கும் நாம் முழுப் பொறுப்பு சொன்னசொல் தவறாத விடுதலைப்புலிகளின் வரலாறு உன்னையும் விடுதலைசெய்யும்”.


## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



அந்தோனிப்பிள்ளை மகள்
திருமதி
மாகிறேற் சேவியர்
மலர்வு: 16-10-1947
உதிர்வு: 31-10-1984

மாசில்லா மாதரசே! மாகிறேற்று மாமணியே! ஆரோகண மாதா அடியினை நீ சேர்ந்திங்கு ஆண்டிரண்டு போனதம்மா! ஆனாலும் நீ எங்கள் அன்பு நெஞ்சில்! வாழுகின்றாய்! ஆயுள் உள்ள நாள் வரைக்கும் அணையா விளக்காய் நீ அருள் சொரிவாய் அன்பு செய்வாய் அருகிருந்து வாழவைப்பாய்! அன்பு நிறை தம்பியதும் அருமை உயிர்த் தங்கையதும் அன்பு மச்சான் களித்திடு நல் இன்பத் திருமணங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்தாய் நடந்தவைகள் முடியுமுன்னே நம்மைவிட்டு ஒடியதேன்? நெஞ்சிருக்கும் வரை இங்கு நின் நினைவை நாம் மறவோம்

இவரின் ஆத்ம சாந்திக்காக வசாவிளான் உத்தரிய மாதா ஆலயத்தில் இன்று மாலை 5-00 மணிக்கு திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

இவர் பிரிவால் துயருறும்:
கணவன், தாய்,
தந்தை, சகோதரர்,
உற்றார், உறவினர் அன்புத்தம்பி மணி.
வசாவிளான்.

(C 5469)



# விவசாயிகளே!

உங்கள் நாற்று மேடைகளை அடி அழுகல், வேர் அழுகல்களை உண்டாக்கும் பங்கசுகளில் இருந்து காப்பாற்ற

- மோரூட் டபிள்யூ.பி. 80% பாவியுங்கள்
  (20 கி. – ரூ. 12/50, 100 கி. – ரூ. 60/-)
  உங்கள் விதைகள், இளம் நாற்றுக்களை பங்கசு நோய்கள் தாக்கா வண்ணம் காப்பாற்ற
- பொமசல் போர்டே டபிள்யூ.பி. 80% பாவியுங்கள் 100 கி. – ரூ. 27/-

பாயர் இரசாயனம் விவசாயிகளின் பெருவிளைச்சலின் உறுதுணை.

BAYER

ஹேகெம் லிமிட்டெட்,
400, டீன்ஸ் வீதி, கொழும்பு – 10.

இது ஒரு ஜேர்மன் தயாரிப்பு

[A 3022]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வெள்ளிக்கிழமை 31-10-86

## புலிகள்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டிகள் அண்மித்தபொழுது கண்ணிவெடித்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலின்போது (ஈ. எல் எவ்.) ட்ரக் ஒன்று சிக்கி முற்றுச் சேதமடைந்தது இதில் பயணம்செய்த 10க்கு மேற்பட்ட இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கை கூறுகிறது. (மா)

# யாழ். கோட்டை முகாமிலிருந்து இராணுவம் வாபஸ்பெற வேண்டும்

## அமைச்சர் லலித்திடம் வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, வியாழன்.

யாழ். ஆஸ்பத்திரி மீது கோட்டை இராணுவ முகாமிலிருந்து தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் 'ஷெல்' தாக்குதல் தொடர்பாகவும் வைத்தியசாலை ஊழியர்கள் நோயாளிகள்படும் இன்னல்கள் பற்றியும் வைத்திய அதிகாரிகள் சங்கப் பிரதிநிதிகள் குழுவொன்று இன்று காலை தேசியபாதுகாப்பு அமைச்சர் லலித்அத்துலத்முதலியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இப்பேச்சுவார்த்தையின் போது யாழ். கோட்டை முகாமிலிருந்து படையினரை வாபஸ்பெறுமாறு தூதுவர்கள் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதற்குப் பதிலளித்தஅமைச்சர் தமிழ்த்தீவிரவாதிகளே ஆஸ்பத்திரி வளவிலிருந்து யாழ். கோட்டை இராணுவ முகாம்மீது குண்டுத்தாக்குதல்களை ஆரம்பிக்கின்றனரெனக் கூறினார். எனினும் வைத்திய அதிகாரிகள் சங்கக் குழுவினரின் வேண்டுகோளையடுத்து யாழ்ப்பாணத்தில் நிலவும் நிலைமையை நேரில் கண்டறியும்பொருட்டு சங்கத்தின் பிரதிநிதியொருவரை அங்கு அனுப்பிவைப்பதற்கு அமைச்சர் சம்மதம் தெரிவித்தார். எ

## யாழ் மாவட்டம் க. பொ. த (உ. த) பரீட்சையில் இருவர் 4 பாடங்களில் அதிவிசேஷசித்தி

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின.

இதுவரை கிடைத்த தகவலின்படி யாழ். மாவட்டத்தில் இருமாணவர்கள் 4 பாடங்களிலும் அதிவிசேஷ சித்தி(ஏ) பெற்றுள்ளனர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியைச்சேர்ந்த செல்வன் ந. சுந்தரன் (கணிதம்), யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் ரி. சத்தியசீலன். (உயிரியல்) ஆகியோர் 4 ஏ' பெற்றனர்.

ஏனைய பரீட்சை பெறுபேறு விபரம்:

யாழ் இந்துக் கல்லூரி: கே. ரவிசங்கர் 2 ஏ' 2 'பி' (கணிதம்], ரி. சுரேஷ் 2 'பி சி எஸ் [வர்த்தகம்] இப்பாடசாலையிலிருந்து கணிதப் பிரிவில் 77 பேரும், உயிரியல் பிரிவில் 34 பேரும்.

வர்த்தகப்பிரிவில் 9 பேரும் பல்கலைக்கழக அனுமதி பெற தகுதியுடையோர்.

யாழ். இந்து மகளிர் கல்லூரி- செல்வி அகிலா செல்வி குண்டலகேசி, செல்வி மாலினி ஆகியோர் 1 ஏ 3 பி (உயிரியல்) பெற்றுள்ளனர். செல்வி ஜெந்தி ஏ, பி' 2 சி [உயிரியல்], செல்வி மைதிலி 2 ஏ, 2 சி (கணிதம்) செல்வி கலாபாமினி, சத்தியசோதி ஆகியோர் வர்த்தகப்பிரிவில் 2 பி. 2 சி, பெற்றுள்ளனர். செல்வி மாலினி 2 ஏ, சி, எஸ் (கலை) செல்வி யமுனாராணி ஏ, பி, சி, எஸ் (கலை)

வேம்படி மகளிர் கல்லூரி; செல்வி ஜீவா கார்த்திகேசு 3 ஏ. பி (கணிதம்), செல்வி அருள்ரஜனி சண்முகராசா 3 ஏ.பி (வர்த்தகம்), செல்வி செந்தில் புஸ்பா பாலசுப்பிரமணியம் 2 ஏ 2பி [உயிரியல்],

கொக்குவில் இந்துக் கல்லூரி; செல்வி எஸ் சேதீஸ்வரி 2ஏ 2பி (உயிரியல்), செல்வி எஸ் இசைஞானி, செல்வன் கே. சுரேஸ்குமார் ஆகியோருக்கு 2 ஏ.பி, சி (கணிதம்), செல்வன் வி. தர்மசேகரன் 3பி, சி [வர்த்தகம்] செல்வன் கே. விசாகரூபன் 3பி சி (கலை).

[வா-சி]

## அரசின் திட்டத்தை முறியடிக்க---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது திருமலையில் நிலைகொண்டுள்ள இராணுவ, கடற்படை, விமானப்படைத் தளங்களின் மத்தியில் பலத்த பாதுகாப்புடன் செயற்பட்டுவந்த இப் பரிவர்த்தனை நிலையத்துள் நள்ளிரவு உட்புகுந்த விசேஷ இராணுவப் பயிற்சி பெற்ற எமது தோழர்கள் அங்கிருந்த ஊழியர்களை வெளியேற்றிவிட்டு இத்தகர்ப்பை நிறைவேற்றிவிட்டு பாதுகாப்பாக இருப்பிடம் திரும்பினர்.

இனப்பிரச்னைக்கு சமாதானத்தீர்வு என்ற மாயையை வெளியே காட்டிக்கொண்டு ஈழப்பிரதேசங்களை இராணுவ ஆக்கிரமிப்புக்குட்படுத்திவரும் இவ்வேளையில் ஆட்சியாளரின் எதிர்கால இராணுவத் திட்டங்களை இங்கு அம்பலப்படுத்த விரும்புகிறோம்

திருமலை நகரின் ஆக்கிரமிப்பிற்கு பக்கத்துணையாக இருக்கும் வகையில் அதன் சுற்றுப்புற கிராமங்களை அதாவது தம்பலகாமம், மூதூர் பகுதிகளில் இருந்து மக்களை முற்றாக அப்புறப்படுத்தல், இதற்காக தற்சமயம் ஈழவர்களை விரட்டியடித்து முகாம்கள் யாவற்றையும் வேகமாகப்பலப்படுத்தி வருகின்றனர் தம்பலகாமத்தில் நீண்டகாலமாக வசித்து வந்த 12 000 பேருக்கதிகமான ஈழவர்களில் 25 குடும்பங்களே தற்போது இருக்கின்றன. மூதூர்பகுதிகளில் இராணுவக் கெடுபிடிகளினால் வீடுகளை விட்டு வெளியேறிய சுமார் 10 000இற்குமதிகமான மக்கள் காடுகளில் தஞ்சம்புகுந்துள்ளனர்.

வடக்கு-கிழக்கு இணைப்பை துண்டிக்கும் நோக்கத்தோடு திருமலையுடன் முல்லைத்தீவு, மட்டக்களப்பு இணைப்பில் தரை மார்க்க தொடர்புகளை இல்லாதொழிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதற்கு முன்நடவடிக்கையாகதிருமலைக்கும், முல்லைத்தீவிற்குமிடையில் மொத்தம் 18 இராணுவமுகாம்கள் அமைக்கப்பட்டு ஈழவரில் பெரும்பாலானவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். சுமார் ஒ லட்சம் மக்கள் வாழ்ந்த இப்பகுதியில் தற்சமயம் 7 000 பேர்வரை மட்டுமே அங்காங்கே அவலவாழ்வு வாழ்ந்து வருகின்றனர். மக்கள் இடம் பெயர்ந்த பகுதியில் ஆயுதபாணிகளாக சிங்களவர்கள் குடியேற்றப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

இதேபோல திருமலை-மட்டு நகர் தொடர்புகளை துண்டிக்கும் வகையில் கல்குடா முதல் பொலநறுவை வரையான பிரதேசங்களில் மதுறுஓயா குடியேற்றத்திட்டத்தின் கீழ் ஆக்கிரமிப்பு நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பிரதேசங்களில் இருந்தும் மக்கள் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். இதுவரை 13 இராணுவ முகாம்கள் தாபிக்கப்பட்டுள்ளன.

மன்னார், மாங்குளம் கிளிநொச்சி பூநகரி முகாம்களை பலப்படுத்தி இம்முகாம்களை எல்லைகளாகக்கொண்ட பிரதேசங்களில் புதிய இராணுவமுகாம்களை ஏற்படுத்தி விடுதலை அமைப்புக்கள் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளன

பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை சிமெந்து தொழிலகம், துறைமுகம் ஆகிய பகுதிகளை இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரக்கூடியதாக அப்பகுதிகளில் நாளாந்தம் முகாம்கள் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை இவ்விஸ்தரிப்பினால் 9000 பேர் வரை விவசாய நிலங்களையும், வீடுகளையும் இழந்து தவிக்கின்றனர்.

பருத்தித்துறை முதல் பூநகரி வரையிலான கரையோரப் பகுதிகளின் கடற் பரப்பைக் கண்காணிக்கவென காரைநகர் கடற்படை முகாமை விஸ்தரித்து கெடுபிடிகளை மேற்கொள்ளவும் திட்டமிட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ இராணுவம் மேற் கொண்ட ஆரம்ப நடவடிக்கைகளில் சுமார் 60.000 மீனவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பலேயப் பகுதிகளில் ஆயுதபாணிகளாக சிங்களவர்களைக் குடியமர்த்தி மலையக மக்களை விரட்டியடிப்பதற்கான முயற்சிகள் ஆரம்பமாகியுள்ளன.

இவ்வாறு ஸ்ரீலங்கா அரசு ஈழப்பிரதேசத்தில் பெரும் பகுதியைவிஸ்தரிப்பினூடு விழுங்குவதற்கு தயார்படும் இச்சூழ்நிலையில் அனைத்துப் போராட்ட அமைப்புகளும் தமது முழுக் கவனத்தையும் எம்மை நெருங்கியுள்ள எதிரியின் பால் திசை திருப்ப வேண்டுமென்பதே இன்றைய அவசியமாகும். இதனை நிறைவேற்றுவதற்கு களத்தில் நிற்கும் சக்திகளிடையே உண்மையான ஓர் ஐக்கியம் பேணப்பட வேண்டுமென வலியுறுத்த விரும்புகின்றோம்." (மா)

# இலங்கை ராஜதந்திரிக்கு கனடா விஸா வழங்க மறுப்பு

கொழும்பு, வியா.

ஒட்டாவாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் மூன்றாவது அதிகாரியாகவுள்ள ராஜதந்திரிக்கு கனேடிய அரசாங்கம் விசா வழங்க மறுத்துள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாவது;.

சி. டி. காரிச்செட்டி என்ற இந்த ராஜதந்திரி வெளிவிவகார அமைச்சின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராக அண்மைக்காலம் வரை கடமையாற்றினார். இவர் கொழும்பிலிருந்து ஒக்ரோபர் 15ம் திகதி செல்லவுள்ளதாகவும் ஆனால் இந்த விசாப் பிரச்னையால் அங்கு செல்ல முடியாதுள்ளார் எனத் தெரியவருகிறது.

கனேடிய அரசாங்கம் முன்னைய உயர்ஸ்தானிகராலய மூன்றாவது அதிகாரியும் தற்போது ஒட்டாவாவில் வசிக்கும் பிரான்ஸிஸ் ஜெயக்கொடி, பிரதம லிகிதர் ஹமகே பள்ளிகபிட்டிய ஆகியோரை கொழும்புக்குத் திரும்புமாறு பணித்துள்ளது ஆனால் அவர்கள் அங்கிருந்துவர மறுத்ததுடன் தமக்கு நிரந்தர வதிவிட அனுமதி வழங்குமாறு கோரியுள்ளனர்.

ஆனால் இவ்விரு அதிகாரிகளும் கொழும்பிற்குத் திரும்பினாலதான் காரிச்செட்டிக்கு விசா வழங்குவதுபற்றி பரிசீலனை செய்யப்படுமென கனேடிய அரசு தெரிவித்துள்ளது. (கே)

## தமிழீழ மக்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு அரண்களும், அவர்களின் இராணுவக் கடமைகளும் இதற்கான சான்றுகளாகும்.

கிழக்கு மாகாணத்திலும் வன்னிப்பகுதியிலும் எதிரிப் படையின் காட்டுமிராண்டித்தனமான அழித்தொழிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணமுள்ளன. பேச்சுவார்த்தை நாடகம் சர்வதேச அரங்கில் போராட்டத்தை நசுக்குவதற்கான தயாரிப்பு உக்கிரமடைந்துள்ள இவ்வேளையில் மொத்தப்போராட்டத்தை குத்தகைக்கெடுத்த மனோபாவம் கேடுகளையே விளைவிக்கும்.

அனைத்துப் போராளிகளுக்குமிடையே உறுதியான ஐக்கியம் வளர்த்தெடுக்கப்படவேண்டிய கால கட்டமிது

ஆகவே 'புளொட்' இயக்கத்தின் மீதான தடை நீக்கப்பட வேண்டும். கைது செய்யப்பட்ட 'புளொட்' போராளிகள் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும், அவர்கள் சுதந்திர முடிவுகள் எடுக்க அனுமதிக்கப்பட வேண்டும், போராளிகளுக்கிடையே ஐக்கியத்தைச் சீர்குலைக்கும் வகையிலான ஆயுதஅச்சுறுத்தல்கள் நீக்கப்பட வேண்டும் எனச் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்கின்றோம் எமது இந்த நியாயமான நிலைப்பாட்டிற்கு மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குவார்களென எதிர்பார்க்கிறோம். (மா-ஓ)

## மரண அறிவித்தல்

### செல்வன் பொன்னம்பலம் விபுலானந்தன்
(யாழ் மத்திய கல்லூரி மாணவ முதல்வர்)

காலஞ்சென்ற ஆ வேலு பிள்ளை திருமதி வேலுப்பிள்ளை பிரண்டிக்கடை) காலஞ்சென்ற கல்முனை திரு. திருமதி ஆ வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்புப் பேரனும், திரு வே பொன்னம்பலம் வள்ளி நாயகியின் அன்புப் புதல்வனும், நித்தியானந்தன் (யாழ் ஹட்டன் நஷனல் வங்கி), சர்வானந்தன், தயானந்தன், சச்சிதானந்தன், கீதா ஆகியோரின் அன்புச் சகோதரருமாகிய செல்வன் விபுலானந்தன் அகால மரணமானார் அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 117, கஸ்தூரியார் வீதி இல்லத்தில் 31 - 10 - 86 பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

[C 5522] தகவல்: வே. பொன்னம்பலம்.

### ஏகாம்பரம் பொன்னையா

மலேயன் பென்சனரும், முன்னாள் பிரபல வர்த்தகருமான ஏகாம்பரம் பொன்னையா வியாழக்கிழமை 30 10 86 காலை 11 மணியளவில் சிவபதமடைந்துவிட்டார். அன்னார் சீனிவாசகம், பரமானந்தம், சண்முகராசா (மலேசியா), பொன்னுத்துரை [வவனிக்குளம்], இராமநாதன், சயிலைநாதன் [நைஜீரியா]. சரஸ்வதி விமலாதேவி, கனகாம்பிகை (ஆசிரியர், பண்டத்தரிப்பு மகளிர் பாடசாலை] ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராசா [துரையப்பா அன்சன்ஸ், தொல்புரம்], வயிரவநாதன் [இ போ.ச வெரகெரா], சண்முகநாதன் (பொறியியலாளர் இலங்கை மின்சாரசபை), சரஸ்வதி, பரமேஸ்வரி, இந்திராணி, பாக்கியலட்சுமி, விமலாதேவி, இரத்தினமலர் (விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் வெள்ளிக்கிழமை பி ப.1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பொன்னாலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

இன்ரநஷனல் கொம்யூனிகேஷன் கொம்பலக்ஸ், மானிப்பாய்.

[C 5517]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு அக்டோபர்மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O. Box 49. Telegram, Eelanadu Telephone: 22389—24126

## ராஜீவ்..-

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டப் பேச்சுவார்த்தை நவம்பர் மாத இறுதியில் அல்லது டிசம்பர் முற்பகுதியில் ஒழுங்கு செய்யப்படுமென அமைச்சு வட்டாரங்களும் கூறின.

மகாண சபைகள் ஸ்தாபித்தல் அவற்றிற்கு அதிகாரப் பரவலாக்கம் செய்தல் தொடர்பான சட்டவாக்கம், வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது, (கே)